
உ

# குரு பூர்ணிமா மலர்



ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை.

06.07.2009



"மகளே உனக்கு மன அமைதி வேண்டுமானால்

உலகத்தவர் மீது குறை கூறாதே.

உன்னுடைய குற்றத்தையே கிளறிப்பார்.

உலகத்தில் வேண்டத்தக்கவர்,

வேண்டத்தகாதவர் என்று ஒருவரும் இல்லை.

உலகனைத்தும் நமதே"

தூயஅன்னை

ஸ்ரீசாரதாதேவி.

# சமர்ப்பணம்

சுவாமி விவேகானந்தர் 1.5.1897 ஆண்டு கொல்கத்தாவில் உள்ள பலராம் போஸ் இல்லத்தில் ராமகிருஷ்ண சங்கத்தின் முதல் கூட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். இன்று உலகெலாம் ஒரு பெரிய ஆலவிருட்சமாகி பலகிளைகளைப் பரப்பி ஆன்மிகப் பணியும் மனிதநேய பணியையும் செய்து வருவது யாவரும் அறிந்ததே தற்போதைய உலகளாவிய 15வது தலைவர் ஸ்ரீமத்சுவாமி ஆத்மஸ்தானந்தர் மகராஜ் அவர்களின் அருளாட்சியில் இயங்கிவருகின்றது. யான் ராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயத்தில் சிலகாலம் தொண்டனாக பணிபுரியவாய்ப்பு அளித்த உயர் திரு அவிநாசிலிங்கம் ஐயா அவர்கட்கும் (Founder Director) மதிப்புக்கும் அன்புக்கும்முரிய ஸ்ரீமத் சுவாமி சோமானந்தர் மகராஜ் (உதவிச் செயலாளர்) அவர்களுக்கும் என்றும் சிரம் தாழ்த்தி வணங்குகிறோம். அடியேனது வாழ்வில் ஐயாவும் ஸ்ரீமத் சுவாமி சோமானந்தர் மகராஜ் அவர்களும் என்றும் எங்கள் இதயத்தில் நீங்கா இடத்தைப் பெற்றுள்ளனர். இன்று ராமகிருஷ்ணமிஷன் வித்தியாலய காரியதரிசி மதிப்புக்கும் அன்புக்கும்முரிய ஸ்ரீமத் சுவாமி ஆத்மராமானந்தர் மகராஜ் அவர்களது அனுசரணையில் பல துறவிகள் சேவை புரிவது தமிழ் நாடு செய்த அரும் பாக்கியம்.


வாழ்க குருதேவர் நாமம்!
என்றும் வளர்க குருதேவர் பணி!

அன்னையின் அடியவன்.



*The souvenir is dedicated at the Holy Feet of His Holiness Srimat Swami Vireswaranandaji Maharaj*

# ஸ்ரீராமகிருஷ்ண மடம் - மிஷனின்
# 15 - வது தலைவர் வணக்கத்திற்குரிய
# ஸ்ரீமத் சுவாமி ஆத்மஸ்தானந்தாஜி மகராஜ்



# ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அமுத மொழிகள்

சிந்தனை செய்மனமே ஸ்ரீ ராமகிருஷ்ணரின்
அமுத மொழிகளை சிந்தனை செய்மனமே

ஆயிரம் ஆயிரம் வேதங்களின் சாரம் - இறைவன்
ஆருயிர்க்கு அளித்திட்ட அருட்பிரசாதம்
அஞ்ஞான இருளகற்றும் ஞான ஒளிதீபம்
மெய்ஞானம் தனையளிக்கும் போதி தருவாகும்

அடியவர் விரும்பிடும் அமுத பானம்
அகங்காரம் தனையழிக்க ஆயுதமாகும்
இகசுகம் தனை பழிக்கும் இனிய மொழியாகும்
பரசுகம் தனை போற்றும் வேத மொழியாகும்

எல்லோர்க்கும் பொருந்திடும் பொன் மொழியாகும்
கல்லார்க்கும் விளங்கிடும் கனி மொழியாகும்
இல்லார்க்கும் துறந்தார்க்கும் பொது மொழியாகும்
பொல்லாரை நல்லாராக்கும் நன் மொழியாகும்

நல்லறத்தை தருவதிலே நான்மறை போலாகும்
நம்பிக்கை தருவதிலே நண்பனுக்கும் மேலாகும்
இல்லறத்தில் இருப்போர்க்கும் கலங்கரை விளக்காகும்
இறைவனை தேடுவார்க்கு எளிய வழியாகும்

தாயைப்போல் தமிழைப்போல் சுவைமொழியாகும்
சேயைப்போல் நமைவளர்க்கும் செம்மொழியாகும்
மாயை திரைவிலக்க மணிமொழியாகும்
மண்ணுயிர்க்கெல்லாம் இது தாய்மொழியாகும்.

சுவாமி ஹரிவ்ரதானந்தா
ராமகிருஷ்ண வித்யாலயம்
கோயமுத்தூர்

# ஸ்ரீராமகிருஷ்ண கோட்பாடுகளின் பூரண ஆன்மீகச் சின்னம்

நிகரற்ற, ஒப்புமைப் படுத்த இயலாத பேராற்றல் கொண்டவரும் எக்காலத்துக்கும் உரிய கருத்துகளைக் கூறியவரும். முழுமையான ஆன்மீகவழிக்கு வித்திட்டவருமான சுவாமி விவேகானந்தரால் இச்சின்னம் உருவாக்கப்பட்டது. வாழ்க்கையை முழுமைப்படுத்த உதவுவது அவரவர் எண்ண அலைகளும் அவற்றின் ஒருங்கிணைவும் என்பதே இதன் சாரம் ஆகும்.

எத்தேசத்து மக்களாயினும் அவர்களுக்கு விவேகானந்தர் சொல்லும் தத்துவம் இது என்றே ஒவ்வொருவரும் தன்னை உணர்ந்தவராக, ஆத்ம தேடல் உடையவர்களாக மாறும் பொழுது சின்னச்சின்ன விஷயங்கள், வரையறைகள் கட்டுகள் ஆகியவற்றிலிருந்து விடுபடுகின்றனர். தன்னைத் தனக்குள் தேடிக் காணுபவன் குறுகிய வாழ்க்கை எனும் வட்டத்திலிருந்து விடுபட்டு பெரும் சமுதாயப் பொறுப்பாளனாக மாறுகிறான். அப்போது அவன் புதுமையானவனாக, ஆசீர்வதிக்கப்பட்டவனாக மாறுகிறான்.

முழுமையான வாழ்க்கைக்கு வழி, எல்லாச் செயல்களிலும் பூரணத்துவம் என்று விவேகானந்தரால் போதிக்கப்பட்டுள்ளது. பூரணத்துவம் என்ற சொல் மிகச் சிறப்பானது. முழுமையான செயல், முழுமையான நிர்வாகம், முழுமையான மருத்துவம், முழுமையான அணுகுமுறை என்று பல வழிகள் உள்ளன.

மக்கள் மனதிலே முழுமையின் மேல் ஆர்வம் உள்ளது. ஆனால் அதை அணுக உதவும் ஒரே வழி ஆன்மீக வாழ்க்கையும் அதன் வழிமுறைகளும் என்பதை உணர்வதில்லை.

**பூரண ஆன்மீகச்சின்னத்தின் விளக்கக் கூறுகள்.**

'மனச்சுதந்திரத்துடன் எங்கும், எப்போதும் இருங்கள். இதுவே அனைத்து மதமும் கூறும் போதனை' என்கிறார் விவேகானந்தர்.

***சின்னத்தின் வெளிப்பாடுகள்.***

நான்கு வகையான யோகநிலைகளை இதில் சுட்டிக் காட்டுகிறார்.

| | |
|---|---|
| அலைபாயும் நீரோட்டம் | கர்மயோகம் |
| தாமரை மலர் | பக்தியோகம் |
| உதய கதிரவன் | ஞானயோகம் |
| வட்டவடிவ சர்ப்பம் | ராஜயோகம் |

இத்தனையும் சூழ, நடுநாயகமாக வீற்றிருக்கும் அன்னப்பட்சி பரமாத்மாவாக உருவகிக்கப்பட்டுள்ளது. இச்சின்னம் எவ்வாறு அல்லது எப்படியெல்லாம் பரமாத்மாவை அதாவது இறைமையை அடையும் வழிகளைப் பற்றிக் கூறுகிறது.

வாழ்க்கையில் பூரணத்துவம் பெற இன்ப துன்பம் எனும் எண்ண அலைகளில் விடுபட்டு கர்மயோகம் வழியாகவும், புனிதமான தாமரை மலர் போன்ற பக்தி யோகம் மூலமாகவும், உதய கதிரவன் போன்று பேராற்றல் கொண்ட பேரறிவாகிய ஞான யோகத்தின் மூலமாகவும், தன்னைத்தானே காத்து நிற்கும் சர்ப்பம் போல நம்மைக் கட்டுப்படுத்திக் காத்து நிற்கும் குண்டனி ஆதாரத்தை நமக்குள் எழுப்பும் வழியாக ராஜயோகத்தையும் அடையாளம் காட்டும் சுவாமி விவேகானந்தர், இறுதியாக....

இறைவனை அதாவது பரமாத்மானந்தத்தை அடையும் வழிகளாக இந்நான்கையும் குறிப்பிடுகிறார். ஆன்மீக வாழ்க்கை முறை, மானிடர்களின் ஒவ்வொரு செயல்களையும், உணர்வுகளையும், எண்ணங்களையும் வெளிப்படுத்த உதவும் சாதனமாகத் திகழ்கிறது. இன்றைய உலகம் தழுவிய வாழ்க்கை முறையில் ஆன்மீகச் செல்வத்தை நமக்கு காட்டிய ஒரு இறைத் தூதராகவே விவேகானந்தர் காட்சியளிக்கிறார்.

# ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் அளித்த பழைய சித்தாந்தங்களின் புதுவடிவங்கள்.

**புதுமைக் கருத்துக்கள்**

பகவான் ராமகிருஷ்ணர் பழமை இந்தியாவுக்கும், புதுமை இந்தியாவுக்கும் பாலமிட்டவர். வேதகாலம் வேதங்களின் முழுமை ஆகியவற்றைப் பல மகான்கள், முனிவர்கள் மூலம் உணர்ந்தவர் பகவான். வேதம், சைவம், சாக்தம், வைணவம் போன்ற மதப் பழமைகளுக்கு புதிய அடித்தளமிட்டு எளிமைப்படுத்தினார். ஒரு குறிப்பிட்ட பிரிவிற்கு மட்டுமே அல்லாமல் அனைவருக்கும் இந்த அற்புதம் போய்ச்சேர வழிவகுத்தவர். அதன் ஒரு பகுதியாகவே வேதாந்தம் புதிய புதிய சித்தாந்தங்களாக நவீன உலகிற்கு அளிக்கப்பட்டது.

**நவீனத்தன்மை**

வேதாந்தக் கருத்துக்களை இன்றைய சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் வகையில் அதன் உண்மை, தூய்மை, சுயசார்பற்ற தன்மை, அழுத்தமான செய்தி ஆகியவற்றை அதன் தன்மை மாறாமல் கொடுப்பது மிகப்பெரும் சவாலாகவே இருந்தது. இன்றைய கல்வி கற்ற இந்து சமுதாயத்திற்கு அவை உகந்தவையாக இருக்க வேண்டும் என்று விரும்பினார் பகவான்.

**தத்துவக் கூடங்களின் ஒருங்கிணைவு**

பழமைக்கும், புதுமைக்கும் இடைப்பட்ட மத்தியக் காலத்தில் சிதறிக் கிடந்த வேதாந்தப் பள்ளிகளை மறுபடி ஒருங்கிணைத்து ஒரு பொதுவான அடித்தளமிட்டவர். பலவிதமான கொள்கைகளையும், கருத்துக்களையும் ஓர் ஒழுங்குக்குக் கொண்டு வந்து, ஒருங்கிணைந்த வடிவம் கொடுத்து ஆத்ம விடிவுக்கு வித்திட்டவர்கள்.

**மதச்சிதறல்களின் கூட்டமைப்பு**

'எல்லா ஆறுகளும் சேருமிடம் கடல்' என்பது போல அனைத்து மதக் கொள்கைகளும் ஒரு குறிப்பிட்ட இலக்கையே கொண்டுள்ளன. பற்பல வேற்றுமைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், பூஜைகள், புனஸ்காரங்கள், நம்பிக்கைகள் சூழ்ந்த இந்து மதத்தில் காலத்திற்கேற்ற புனரமைப்பு செய்யப்பட்டு புதிய எழுச்சி உருவாக வேண்டும் என்று நினைத்தனர்.

**சவால்களைச் சந்தித்தல்**

11 ஆம் நூற்றாண்டு காலத்தில் வேதங்கள், அதைச் சார்ந்த அமைப்புகளும் தங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகளை மட்டுமே சந்தித்தது. இவை புத்த ஜைன மதம் தோன்றியதால் ஏற்பட்டது. தங்களுடையது மிக உயர்வானது என்ற எண்ணத்தால் ஏற்பட்டது. 13 ஆம் நூற்றாண்டில் முகம்மதியம் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இஸ்லாமிய மதகுருமார்கள் மூலம் கடவுள் ஒருவரே, மனித உரிமைகள். மனித சகோதரத்துவம், சமநிலை ஆகியவை போதிக்கப்பட்டது.

18, 19 ஆம் நூற்றாண்டுகளில், இந்தியச் சமுதாயம் இதுவரை காணாத அளவு மேற்கத்திய கலாச்சாரமும், கிறிஸ்துவ மதமும் நுழைந்தது. அதன் தாக்கங்கள் என பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

புதுமை நோக்கும் விஞ்ஞானப் போக்கும்

சுதந்திரம் பெற்ற நாட்டின் சமுதாய நெறிமுறைகள்

நம்மிடையே உள்ள ஏழைமக்கள், நோயாளிகள், ஆதரவற்றவர்கள் இவர்களைக் காக்கும் எண்ணங்களின் எழுச்சிகள்.

இச்சூழ்நிலையில் இந்துதத்துவம் சரியான திசையில் பயணிக்க வேண்டுமெனில் காலமாற்றங்கள் அடிப்படையில் சீரமைப்பு நடைபெறுவதன் அவசியம் உணரப்பட்டது. அதன் வழி, ஸ்ரீராமகிருஷ்ணர் விவேகானந்தரால் சிற்சில மாற்றங்கள் விதைக்கப்பட்டன.

வேதங்களின் கருத்துச் சீரமைப்பு

மகான்களால் கண்டறியப்பட்ட மெய்ஞ்ஞானக் கருத்துக்களைப் புத்தொளிப்படுத்தல்.

அன்றாட வாழ்க்கையில் கிறித்துவ வேத நூல்களுக்கு இணையான சமூக நெறிகொண்ட பார்வைகளுக்கேற்ற வேத நெறிகளைப் புனரமைப்புச் செய்தல்.

**நடைமுறை வேதாந்தக் கொள்கை**

தினசரி வாழ்வில் ஏற்படும் பல சஞ்சலங்களை சிக்கல்களை விடுவிக்க உதவுவது 'நடைமுறை வேதாந்தம்' பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, மக்கள் முக்தி அடைய உதவும் வழிகளாக மட்டுமே வேதாந்தம் கடைப்பிடிக்கப்பட்டது.

இதை மாற்றி மனித சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கையின் ஓர் அங்கமே வேதம் என நிருபித்தனர். தனி மனிதனை மட்டும் அல்ல சமுதாயத்திற்கும் வேதக் கருத்துக்கள் எப்பவும் பொருந்துகிறது எனக் காட்டினார். சுவாமி விவேகானந்தரின் கருத்துப்படி இந்தியா இவ்வளவு வளமிருந்தும் பின்தங்கக் காரணம், முக்கியமாக இந்திய மக்கள் தங்களின் வாழ்க்கையில் உண்மையான ஆன்மீக மார்க்கத்தைக் கடைபிடிக்காததே காரணம் ஆகும்.

**உலகளாவிய வேதாந்த நெறிமுறைகள்**

பலவகைத் தளைகளால் கட்டுப்பட்டு, ஓர் குறுகிய வட்டத்திற்குள்ளேயே வேதம் இருந்தது. குறிப்பிட்ட சில பிரிவைச் சேர்ந்தவர்களே அதன்படி ஒழுகினர். இந்து மதத்தில் பிறந்தவர்களுக்கு மட்டுமே வேதம் சொந்தம் எனவும் கூறப்பட்டது. ஸ்ரீ ராமகிருஷ்ணர், விவேகானந்தர் பிரவேசத்திற்குப் பின்னரே உலகில் உள்ள அனைத்து மதத்திற்கும், அனைத்து மக்களுக்கும் ஏற்புடைய கொள்கைகள் வேதாந்தக் கொள்கைகள் என்று வெளிப்படுத்தினர். எல்லா இடங்களுக்கும் நேரங்களுக்கும், தேவைகள், அவாவிற்கும் ஏற்ற மனிதம் சார்ந்த மதம் இந்து மதம் என அறிவிக்கப்பட்டது.

இதன்படி வேதமையங்கள் ஏற்படுத்தப்பட்டு, பிரசங்கங்கள், சொற்பொழிவு, வாயிலாகப் போதிக்கப்பட்டது. பல்முனை எழுச்சி விவேகானந்தரால் ஏற்படுத்தப்பட்டு வேதாந்தக் கருத்துக்கள் இந்தியாவைத் தாண்டி மனித சமுதாயத்திற்கேற்ற சொத்தாகப் பரவியது. அவரால் உருவாக்கப்பட்ட இப் புனிதப்பணி, இன்று உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான சீடர்கள், யோகிகள், சாதுக்கள், ஆசிரியர்கள், அமைப்புகள் மூலமாக செயல்பட்டு வருகிறது என்பது நிதர்சன உண்மை.

## சேவையே வாழ்வின் வழி

ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கம் பன்னோக்குத் தன்னார்வச் சேவை வெளிப்பாடுகள் கொண்டது. பலவிதமான களங்களில் மனித குலத்திற்கு, சமூகநலம், கல்வி உடல் நலம், கிராமப்புற மேம்பாடு, சுயவேலை வாய்ப்பு, ஆன்மீகத் தேடலுக்கான வழி காட்டல், இயற்கைப் பேரழிவுகளிருந்து மக்களை மீட்டல், போன்ற தொண்டுகள் இவ்வியக்கத்தாரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவையனைத்தும் கடவுளுக்குச் செய்யும் சேவையாக மனிதனால் மனிதனுக்குச் செய்யப்படுகிறது.

இவ்வியக்கத்தாரால் மேற்கொள்ளப்படும் தொண்டுகள் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் உட்படுத்தப்படவில்லை, அது சாதுக்களின் வாழ்வோடு பின்னிப்பிணையப் பட்டுள்ளது. வாழ்வின் விளிம்பு வரை தொண்டர்கள் உற்சாகமாக எல்லாப் பணிகளிலும் ஈடுபடுகின்றனர். பல சாதுக்களின் தொண்டு சில காரணங்களுக்காக. வயது நோய் காரணமாக வெளி இடங்களில் இல்லாமல் இருப்பினும் அவர்களுக்குள்ளாக நடைபெற்றுக் கொண்டே உள்ளது. தங்களால் முடிந்த வழியில் எல்லாம் தன்னார்வத் தொண்டில் பொருத்திக் கொண்டு தங்கள் சேவையைத் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

இயக்கத்தின் சிறப்பம்சங்கள்

- தன்னலமின்மை
- தியாகம்
- அன்பு

கர்ம யோகம், பக்தியோகம், ஞானயோகம், ராஜயோகம் போன்ற பல நிலைகளில் செயல்பாடுகளில் ஆன்மீக வழியில் தங்களை ஈடுபடுத்தி, பல பயிற்சிகள் மேற்கொண்ட யோக சீலர்களால் இவ்வியக்கத்தின் புனிதப்பணி நடைபெற்று வருகிறது. இங்குள்ள சாதுக்கள், தங்களுடைய சுயநலமற்ற, தியாதகத்துடன் கூடிய அன்பை மனிதசேவைக்காக அர்ப்பணிக்கிறார்கள், இந்தப் பெருமை தனியாக யாருக்கும் கிடையாது. முழுப் பெருமையும் இயக்கத்திற்கே உரியது.

இதில் இருப்போர் தங்களின் தன்னலமற்றப் பணிக்காக எவ்விதமான பிரதிபலனோ, அங்கீகாரமோ, புகழையோ இவர்கள் எதிர்பார்ப்பதில்லை. இந்த எண்ணமே அவர்களின் சேவையைப் பரிபூரணம் அடையச் செய்கிறது.

**சுதந்திரம், சமஉரிமை, சகோதரத்துவம்**

சுவாமிஜி அவர்கள் 'சுதந்திரமே வளர்ச்சிக்கு வழி' என்று கூறுகிறார். சேவை என்பது அனைத்துத் தர மக்களுக்கும் பொதுவான ஒன்று அவர்களின் நோக்கம் மக்களின் நலன் மட்டுமே. அவர்கள் ஏழையோ பணக்காரனோ, அந்தணரோ, ஹரிஜனோ, இந்துவோ, முஸ்லீமோ, கிறித்துவரோ அனைவருமே புனிதமான கடவுளின் குழந்தைகளே, மக்கள் இருக்கும் நிலையில் அதாவது தாழ்நிலையில் இருப்பவரை மேலே கொணர்தல். அதற்காக உயர்நிலையில் இருப்பவர்களைத் தாழ்த்துதல் அல்ல. அவர்களின் நிலைமைக்கு அனைவரையும் உயர்த்தல் என்பதாகும். சகோதரத்தன்மையுடன் இவ்வியக்கம் செயல்பட்டு வருகிறது என்பது கண்கூடு.

**குழுப்பணி, திறமை, மேம்பாடு, அற்புத ஆற்றல்:**

இவ்வகை யுக்திகள் வணிக நிறுவனங்களில் மட்டுமே மேற்கொள்ளப்படும் செயல்கள். ஆனால் இத்தன்னார்வப் பொதுத் தொண்டு நிறுவனத்தில் சாதுக்களால் இப்பயிற்சிகள் அனைத்துமே கைக்கொள்ளப்படுகின்றன. இயக்கம் சார்ந்த பணிகள் அவர்களுக்கு அளிக்கப்படும்பொழுது எந்தெந்த முறைகளில் எல்லாம் சிறப்பாகச் செயல்பட முடியுமோ. அவ்வழிமுறைகளைத் தவறாது கையாளுகின்றனர். வீணடிப்பு, நட்டம் எல்லாத் துறைகளிலுமே தவிர்க்கப்படுகிறது. குறைந்த அளவு நிதி ஒதுக்கீடு மட்டுமே

இயக்கத்தினருக்கு. அவர்களின் வாழ்வுத் தேவைக்கு ஒதுக்கப்படுகிறது. மற்றவை மனித குல நலனுக்காக அர்ப்பணிக்கப்படுகிறது.

சகோதரத்துவ மனப்பான்மையுடன் இங்கு பணிபுரியும் சாதுக்களின் திறமை மேம்பாடு வெளிப்படுத்தப்பட்டு, அற்புத ஆற்றலுடன் குழுப்பணிகளாகப் பிரிக்கப்பட்டு பணிகள் செம்மையாக நடைபெறுவதால் இயக்கம் பெருமை அடைகிறது.

**உண்மை, நேர்மை, தூய்மை**

இவ்வியக்கம் மக்கள் நலனுக்காகச் செலவு செய்யும் நிதி முழுவதும் மக்களிடம் பெறும் நன்கொடையாலும், அரசு உதவி நிதியாலும் நடைபெறுகின்றது. எவ்விதக் கறையோ, குறையோ இல்லாமல் இதன் கணக்குகள் முறைப்படுத்தப்படுகின்றன. கணக்குகள் பரிசோதிக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. நிதி நிர்வாகத்தில் தூய்மையும், உண்மையும் பெற்று, நேர்மையான சிறந்த தரமுள்ள அமைப்பாக இவ்வியக்கம் நடைபெற்று வருகிறது எனும் சான்றிதழே இவ்வியக்கத்தின் பெருமையைப் பறைசாற்றுகிறது.

***அரசியல் கலப்பற்ற தன்மை***

மக்களாட்சி நடைபெற்று வரும் நமது நாட்டில் சமுதாய நலத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசாங்கத்தையும் சார்ந்துதான் செயல்படவேண்டி உள்ளது. ஆன்மீக வழிசார்ந்த இயக்கமாகிய ராமகிருஷ்ண மடத்தில் அரசியலோ அதிகாரத் துஷ்பிரயோகமோ அரசியல்வாதிகளின் தலையீடோ இல்லாமல் மக்கள் மேம்பாடு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நடந்து வருவது இதன் முக்கிய அம்சமாகும்.

# ஸ்ரீராமகிருஷ்ண இயக்கத்தின் வரலாறு

புத்தர், இயேசுநாதர் போன்ற அவதார புருஷர்களின் வரலாறுகளைப் போன்றே, ஸ்ரீ ராமகிருஷ்ணர் மற்றும் ராமகிருஷ்ண இயக்கத்தில் வரலாறுகளும் உலக சமய வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. உலக மக்களின் உய்விற்காகப் பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை தோன்றும் சமய இயக்கங்களில் ஆர்வம் உள்ளவர்களுக்கு, ராமகிருஷ்ண இயக்கத்தின் வரலாறு ஆன்ம எழுச்சியை ஊட்டக்கூடிய ஒன்றாகும்.

மனிதகுலத்தை மேம்படுத்தும் ஆக்கபூர்வப்பணிகளில் மக்களை வழிநடத்திச் செல்லக்கூடிய இயக்கம் ஒன்றைத் தொடங்கவேண்டி 1897ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தர் தம் சகோதரத்துறவிகளுடனும் அன்பர்களுடனும் கலந்தாலோசித்தார். அதன் விளைவாகத் தோன்றியதே ராமகிருஷ்ண மிஷன் ஆகும். அதன் முதல் தலைவர் சுவாமி விவேகானந்தர் ஆவார். அவரைத் தொடர்ந்து சுவாமி பிரம்மானந்தரும் சுவாமி சிவானந்தரும், பின்னர் மற்ற துறவிகளும் ஒருவர் பின் ஒருவராக இச்சங்கத்திற்குத் தலைமைப் பொறுப்பேற்றனர். சுவாமி விவேகானந்தரின் மறைவிற்குப் பின் இச்சங்கம் சட்டப்படி பதிவு செய்யப்பட்டது.

இச்சங்கத்தின் குறிக்கோள் :

அ) ஸ்ரீராமகிருஷ்ணர் வாழ்ந்து அருளிச் செய்த வேதாந்தக் கருத்துக்களைப் பரப்புதலும் மதங்களின் ஒற்றுமையைப் பரப்புதலும்.

ஆ) கலை, அறிவியல், தொழில் ஆகியவற்றை வளர்த்தலும், ஊக்குவித்தலும்.

இ) மேற்கண்ட துறைகளில் ஆசிரியர்களைப் பயிற்றுவித்து அவை பாமரரைச் சென்றடையச் செய்தல்.

ஈ) பாமரர்களிடையே கல்விப்பணியில் ஈடுபடுதல்.

உ) பள்ளிகள், கல்லூரிகள், அனாதை இல்லங்கள், தொழிற் கூடங்கள், ஆய்வகங்கள், மருத்துவமனைகள், சுகாதார மையங்கள், உடல் ஊனமுற்றோருக்கும், பாதிக்கப் பட்டோருக்குமான இல்லங்கள், பஞ்ச நிவாரணப் பணிகள்

மற்றும் பிற அறநிலையங்களை நிறுவுதலும் அவற்றைப் பேணிக் காத்தலும்.

ஊ) தன் குறிக்கோள்களைப் பரப்பவேண்டி, வாரமாத இதழ்கள் நூல்கள், துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றை வெளியிடல்.

எ) மேலே கூறப்பட்ட நோக்கங்களை நேரடியாகவோ, மறைமுகமாகவோ செயல்முறைப் படுத்தத் துணைபுரியும் மற்ற செயல்களையும் இச்சங்கம் தன் சக்திக்கேற்பச் செய்தல்.

இச்சங்கத்தின் அங்கத்தினர்கள், கீழ்க்கண்ட உறுதிமொழிகளை ஏற்றுக் கையொப்பமிட்டனர்.

அ) என்றும் நிலைத்த சனாதன தர்மத்தின் விளக்கமாகவும், உருவமாகவும் ஸ்ரீ ராமகிருஷ்ணரை நான் கருதுகிறேன். அவரது வாழ்வும் வாக்கும், உலக சமயங்களின் நோக்கத்தையும் அமைப்பையும் அறியவும், அவற்றின் ஒருமைப்பாட்டை உணரவும் பெரிதும் உதவுகின்றன.

ஆ) அனைத்துச் சமயங்களும் இறைவனை அடைதற்குரிய பல்வேறு வழிகள் என்றுணர்ந்து அச்சமயங்களைப் பின்பற்றுவோருடன் நான் சகோதர நேயத்துடன் வாழ்வேன்.

இ) ராமகிருஷ்ண மிஷனின் குறிக்கோள்களை நான் மனப்பூர்வமாக ஏற்று அதன் பணிகளில் முழுமனதோடு ஈடுபடுவேன்.

சாதி, இன வேறுபாடின்றி, இக்குறிக்கோள்களில் ஆர்வமுள்ளவர்கள் யார் வேண்டுமானாலும் இச்சங்கத்தில் உறுப்பினர் ஆகலாம்.

தங்கள் குடும்பத்தையும், செல்வத்தையும் துறந்து, எளிமை, துறவு, தொண்டு ஆகியவற்றைத் தங்கள் வாழ்க்கைக் குறிக்கோளாக ஏற்ற துறவிகள் மட்டும் அடங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் என்ற அறநிறுவனமும் இத்துடன் தொடங்கப்பட்டது. சுவாமி விவேகானந்தர் இவ்வியக்கத்தின் குறிக்கோளை விளக்குகிறார். இந்நிறுவனத்தின் நோக்கம் மனிதர்களை உருவாக்குவதே. முனிவர்கள் போதித்ததைக் கற்றுக் கொண்டால் மட்டும் போதாது. நீங்கள் முனிவர்களாகவே ஆக வேண்டும். வெறும் புத்தக அறிவினால் என்ன பயன்? மந்திரங்களும் தந்திரங்களும் என்ன செய்யும்? நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

வலிமையே வடிவானவனும், அதேசமயம் பெண்ணின் இளகிய இதயத்தைக் கொண்டவனுமே உண்மையான மனிதன். உங்களை சுற்றியுள்ள இலட்சக்கணக்கானவர்களுக்காக நீங்கள் இரக்கப்பட வேண்டும். ஆனால் அதேசமயம் வலிமையுடையவர்களாகவும், எதற்கும் அசைந்து கொடுக்காதவர்களாகவும் இருக்கவேண்டும். இது ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகத் தோன்றலாம். ஆனால் இவ்வாறு முரண்பட்டதாகத் தோன்றும் பண்புகளை நீங்கள் பெற்றே ஆகவேண்டும். கீழ்ப்படியும் தன்மையும் உங்களிடம் இருக்க வேண்டும். கட்டளைதவறாக இருப்பினும் முதலில் கீழ்ப்படிந்த பின்னரே அதனைப்பற்றி விவாதிக்க வேண்டும்.

இவ்வாறாக கீழ்கண்ட சிறந்த அம்சங்களைக் கொண்ட ஒரு துறவிகள் மடம் முதன்முதலாக இந்தியாவில் அமைக்கப்பட்டது.

அ) தன்னலமின்றிச் செய்யப்படும் அம்சங்களைக் கொண்ட ஒரு துறவிகள் மடம் முதன்முதலாக இந்தியாவில் அமைக்கப்பட்டது.

ஆ) சாதுக்கள், ஜபத்திலும் தியானத்திலும் ஈடுபடுவதோடு ஏழைகளுக்கும், துன்பப்படுபவர்களுக்கும், கீழ்நிலையில் உள்ளோர்களுக்கும், சேவை செய்ய வேண்டும்

இ) ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சமய ஒருமைப்பாட்டைப் போதிப்பது இதன் மூன்றாவது சிறப்பம்சமாகும். ஆகவே பல நாடுகளையும், பல சமயங்களையும் சேர்ந்தவர்கள், அதாவது இந்துக்கள், கிறிஸ்துவர்கள், முஸ்லீம்கள், பார்சிகள் முதலியோர் ஒன்றாக வாழ்ந்து ஒன்றாகத் தொண்டு செய்து ஆன்மீக இன்பம் பெறுவதை ஸ்ரீராமகிருஷ்ண இயக்க நிறுவனங்களில் காணமுடிகிறது.

## திருமிகு ஐயாவும் அருட்தொண்டும்

'தோன்றின் புகழோடு தோன்றுக' என்னும் வள்ளுவக் கூற்றுக்கு வாழ்க்கை விளக்கமாகத் திகழ்ந்தவர் பத்மஸ்ரீ ஐயா. தி.சு.அவிநாசிலிங்கம் அவர்கள்தான் என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை. விழா மலரின் இந்தப் பக்கங்களின் நோக்கம் வகை வகையான சொற்களால் ஐயாவின் புகழ் பாடுவது அன்று. இது மாவீரர்களும். மஹாபுருஷர்களும் ஞானிகளும் ஜனித்த பூமி ஆனால் இந்த புண்ணிய பூமியில் இன்றைய நாளில் கடமை உணர்ச்சியும் பொறுப்புணர்ச்சியும், தேசப்பற்றும், மனிதாபிமானமும் வெகுவாகக் குறைந்து கிட்டத்தட்டக் கேள்விக்குறிகளாகவே காட்சியளிக்கின்றன. இந்த நிலை மாற வேண்டுமெனில் தனக்கே உரிய பெருமையுடன் இந்த தேசம் பீடுநடை போடவேண்டுமெனில் இந்த தலைமுறையினரும் இனிவரும் தலைமுறையினரும் ஐயா அவர்களைப் படித்தே ஆகவேண்டும். ஏனெனில் ஐயா அவர்கள் வெறும் பாடம் அல்ல பல்கலைக்கழகம். அவர் இலட்சியத்தின் ஓர் அடையாளம் தேசபக்தியின் அவதாரம், மறுமலர்ச்சியின் உருவம், மனித நேயத்தின் முகவரி ஆகவே அனைவரும் வாரீர்!

ஐயா என்னும் அந்த பல்கலைக்கழகத்துள் நுழைந்து நம்மை நாம் அடையாளம் காணுவோம். அறியாமையால் பழுதுபட்டுக்கிடக்கும் நமது பக்கங்களையெல்லாம் புதுப்பித்துக் கொள்வோம்.

## இளமைப்பருவமும் குடும்பப் பின்னணியும்

1903ஆம் ஆண்டு மே மாதம் 5ம் நாள் திருப்பூரில் ஒரு பெரிய செல்வந்தர் குடும்பத்தில் அவர் பிறந்தார். அவர் தாயார் திருமதி பழனியம்மாள் ஆழ்ந்த இறைபக்தி உடையவர். அவர் தனது குடும்பத்தை நன்கு பராமரித்து வந்தார். அவரது தந்தையார் திரு.கே.சுப்பிரமணிய செட்டியார் ஒரு பெரிய வணிகர். வங்கி நடத்தி வந்தார். மிகுந்த தர்மசிந்தனை உடையவர். நான்கு குடும்பங்கள் சேர்ந்த பெரிய கூட்டுக்குடும்பம் அவருடையது. இக்கூட்டுக் குடும்ப வாழ்க்கை மற்றவர்களின் தேவைகளை மதித்தல், மற்றவர்களின் விருப்பு வெறுப்புகளை உணர்ந்து நடத்தல், அன்பு பரிவு போன்ற பல நற்குணங்களை ஐயா அவர்களிடம் வளர்த்தது.

ஐயா அவர்கள் நான்கு சகோதரர்களையும் நான்கு சகோதரிகளையும் கொண்ட பெரிய குடும்பம் அவருடையது. அவருடைய மூத்த தமையனார் திரு.கந்தசாமி செட்டியார் அன்புள்ளம் கொண்ட சிறந்த மனிதர். திருப்பூரில் அவருடைய குடும்ப வங்கியை நிர்வாகித்து வந்தார். அவர் ஸ்ரீராமகிருஷ்ணரிடமும் காந்தியடிகளிடமும் மிகுந்த பக்தி பூண்டிருந்தார். அவரிடமிருந்துதான் அவர் முதன் முதல் ஸ்ரீராமகிருஷ்ணர் சுவாமி விவேகானந்தர் மற்றும் காந்தியடிகளைப் பற்றித் தெரிந்து கொண்டார்.

சட்டப்படிப்பை முடித்ததும் வழக்குரைஞர் பணிக்கு பதிவு செய்து கொண்டு முதல் திருப்பூரிலும், பின்னர் கோவையிலும் பணியாற்றினார். கோவையில் அவரது பணி சிறந்த முறையில் தொடங்கிற்று. இத்துறையில் அவருக்குச் சிறப்பான எதிர்காலம் உண்டு என்று மற்றவர்கள் எண்ணினர். ஆனால் வழக்குரைஞர் பணியில் அவருக்கு மகிழ்ச்சியோ மனநிறைவோ இருக்கவில்லை. சுவாமி விவேகானந்தரின் உணர்ச்சியூட்டும் சொற்களான 'நீ மகத்தான செயல்களைச் செய்யப் பிறந்திருக்கிறாய். உன் சொந்த நலனுக்காவும் பணத்திற்காவும் சாதாரணச் செயல்களில் நீ உன் வாழ்க்கையை வீணாக்கக் கூடாது' என்பவை தொடர்ந்து அவரது நினைவுக்கு வந்தன.

நாட்கள் செல்லச் செல்ல வழக்குரைஞர் தொழிலில் அவரது ஆர்வம் குறைந்தது. அன்பர் பணி செய்ய தன்னை ஆளாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தது. அவரது சிறிய தந்தையின் குடும்பத்தார் அவர் மீது மிகுந்த அன்பு காட்டினர். ஆயினும் அவர் மேன்மேலும் ஆசிரம வாழ்க்கையிலேயே ஆர்வம் காட்டினார். நண்பர் சுவாமி சித்பவானந்தர் பொறுப்பு வகித்த உதகை ஆசிரமத்திற்கு அடிக்கடிச் செல்வார். எதிர்காலப் பணியைப்பற்றி அவர்கள் நீண்ட நேரம்உரையாடுவார்கள். அமைதியான தியானத்திற்கும் உள்ளார்ந்த சிந்தனைக்கும் அதிகநேரம் கிடைத்து கடைசியாக ஓர் அனாதை இல்லத்தைத் தொடங்கிப் பணி செய்யலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். உடனே அதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

1929 ஆம் ஆண்டு விஜயதசமி நன்னாள் உதகை ஆசிரமத்தில் அன்னைக்குப் பூஜை நடந்தது. வழிபாட்டை முடித்துக்கொண்டு அவர்கள்

திண்ணையில் அமர்ந்திருந்தனர். அந்த விஜயதசமி நன்னாளிலேயே அனாதை இல்லத்திற்கான பணியை ஏன் தொடங்கக்கூடாது என்ற எண்ணம் உதித்ததால் ஐயா அவர்கள் சுவாமி சித்பவானந்தரிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தார். அவர் சம்மதித்ததால் அதன் தொடக்கத்தின் அடையாளமாக இவர் ரூ 5ம் சுவாமிகள் 50 பைசாவும், சாலையில் கண்டெடுத்த 25 பைசா நாணயமும் ஆகமொத்தம் ரூ 5.75 உடன் வித்யாலயம் எண்ணத்தில் உருவாயிற்று.

வித்யாலயத்தின் தொடக்க விழாவிற்கு வருமாறு சுவாமி யதீஸ்வரானந்தரை ஐயா அவர்கள் அழைத்திருந்தார். அவரும் அதற்கு இசைந்து அதற்கு முந்தைய நாள் அதிகாலையில் கோயமுத்தூர் வந்து சேர்ந்தார்.

வித்தியாலத்தின் தொடக்கவிழா 1930 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3ஆம் நாள் காலை 6.30மணிக்கு மிகவும் எளிமையாக நடந்தது. இவ்விழா கோவை நகரில் ரேஸ்கோர்ஸ் பகுதியில் அவரது குடும்பத்திற்குச் சொந்தமாக ஓர் ஓட்டுக்கட்டிடத்தில் நடைபெற்றது.

தொடக்க விழாவிற்குப்பின் அவர் தனிமையில் விடப்பட்டதால் புதிய நிறுவனம் ஒன்றைத் தொடங்கி நடத்துவதில் இருந்த சிரமங்கள் வெளிப்படத்தொடங்கின.அரிஜன மாணவன் ஒருவனைச் சேர்த்துக் கொண்டதால் பலரும் இந்நிறுவனத்தைப் புறக்கணித்தனர். இதில் சேரும் மாணவர்களுக்கு உணவு உறைவிடம், துணிமணிகள், பாடபுத்தகங்கள், நோட்டுபுத்தகங்கள், பென்சில்கள், படிப்பு முதலியன இலவசமாகவும் விடுமுறையில் அவர்கள் ஊர் சென்று திரும்பிவரத்தேவையான போக்குவரத்துச் செலவும் கொடுக்க இந்நிறுவனம் முன்வந்த போதும் நீண்ட நாட்கள் மாணவர்களே வந்து சேரவில்லை, இருப்பினும் இச்சூழ்நிலை மாறிற்று அவர்கள் கொடுத்த இலவச வசதிகளால் கவரப்பட்டு, பல ஏழைக்குழந்தைகள் வந்து சேர்ந்தனர். தொடக்கத்தில் தான் தனிமையில் விடப்பட்டதாகக் கூறிய அவருக்கு அறிவுரை கூறி தைரியப்படுத்தி வழிகாட்டி பாதுகாத்து வந்தவர் ஸ்ரீராமகிருஷ்ணர். இது வெறும் புகழ்ச்சியான சொல் மட்டும் அல்ல. இதை நிரூபிக்கும் வகையில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஐம்பத்திரண்டு ஆண்டுகளாகப் பல்வேறு சோதனைகளுக்கும்,

இன்னல்களுக்கும் இடையில் இந்த நம்பிக்கை அவரிடம் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது.

## சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுதல்

காந்தியடிகளை ஐயா அவர்கள் முதன் முதல் 1920 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தின் போது சென்னையில் சந்தித்தார். அப்பொழுது அவர் சென்னையில் இன்டர்மீடியேட் வகுப்பில் பயின்று கொண்டிருந்தார். மற்ற பல மாணவ நண்பர்களுடன் அவர் சென்னைக் கடற்கரையில் காந்தியடிகளும் மௌலானா சௌகத் அலி பேசிய கூட்டத்தில் கலந்து கொண்டார். அவர் காந்தியடிகளை அடுத்தமுறை 1926 ஆம் ஆண்டு திருப்பூரில் சந்தித்தார். அப்பொழுது அவர் இந்தியா முழுவதும் கதர் இயக்கத்தைப் பரப்பச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அங்குக் காந்தியடிகளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

## சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழா

வித்யாலயத்தில் 1936 ல் ஸ்ரீராமகிருஷ்ணர் நூற்றாண்டு விழாவும் 1953ல் அன்னை சாரதா தேவியார் நூற்றாண்டு விழாவில் அதையொட்டி ஸ்ரீராமகிருஷ்ணர் ஆலயத் திறப்பு விழாவும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. 1963 ஆம் ஆண்டில் சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழா மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

வித்யாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுள் குறிப்பிடத்தக்கது. 'கல்வியில் ஆன்மிகப்பண்புகள்' (The place of spiritual values in education) என்ற பொருளில் நடைபெற்ற மூன்று நாள் கருத்தரங்கு ஆகும். தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகிய பல்வேறு நிலைகளில் ஆன்மீகப் பண்புகளை வளர்க்கும் வழிமுறைகள் பற்றி இக்கருத்தரங்கு ஆராய்ந்தது. கருத்தரங்கின் உறுப்பினர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து ஆய்வு செய்து தங்கள் பரிந்துரைகளை அறிக்கைகளாகச் சமர்ப்பித்தனர். தென்னகத்தின் பல்வேறு மாநிலங்களின் கல்வியமைச்சர்கள் மத்திய அரசின் கல்வித்துறையால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

நூற்றாண்டு விழாவின் நினைவாக கோவை மனையியல் கல்லூரியில் சுவாமி விவேகானந்தர் அரங்கு ஒன்று கட்டப்பட்டது. அது பின்னர் திருமதி. இந்திராகாந்தி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கோவை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான பள்ளிகளில் சுவாமிஜியின் வாழ்வும் வாக்கும் பற்றிய சிறப்புரைகளுக்கு மனையியல் கல்லூரி ஏற்பாடு செய்தது. சுவாமி விவேகானந்தரின் வாழ்வும் வாக்கும் பற்றி டாக்டர் திருமதி. ராஜம்மாள் P.தேவதாஸ் அவர்களால் மாணவர்களுக்குரிய நூல் ஒன்று தமிழில் எழுதப்பட்டது.

## திருக்குறள் ஆராய்ச்சி

ஐயா அவர்கள் ஒவ்வொரு நாளும் காலை வழிபாடு தியானம் ஆகியவற்றுக்குப்பின் ஒரு மணி நேரம் அமைதியாகப் படிப்பதற்குச் செலவழித்தார். இவ்வாறு அவர் படித்த நூல்களுள் திருக்குறள், சைவ வைணவ பக்தி நூல்கள், பகவத்கீதை, ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்.ஆகியன குறிப்பிடத்தக்கன.

திருக்குறளைப் படிப்பவர்கள். அது ஆய்வு செய்யத்தக்க நூல் என்பதைப் புரிந்து கொள்வார்கள். திருக்குறளுக்கு ஏராளமான விளக்கவுரைகள் இதுவரை வெளிவந்துள்ளன. இவற்றுடன் அவ்வப்போது சிறு அளவிலான விளக்க நூல்களும் எழுதப்பட்டுள்ளன. இவ்விளக்க உரைகளுள் மணக்குடவர், பரிதி பரிப்பெருமாள், காளிங்கர், பரிமேழலகர் ஆகியோரின் உரைகள் மட்டுமே கிடைத்துள்ளன. இவற்றுள்ளும் பரிமேலழகர் உரை மட்டுமே இன்று பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. பல்வேறு உரையாசிரியர்களின் உரைகளைத் தொகுத்து இதுவரையாரும் தயாரிக்கப்படடவில்லை என்பதை அறிந்து வியந்தார். பல்வேறு பொருள்களைப் பற்றிக் கூறும் திருக்குறளுக்குப் பொருளகராதி அவசியம் என்பதை அவர் உணர்ந்தார்.

தற்காலத்துக்கு ஏற்றபடி திருக்குறளின் பல கூறுகளையும் பகுத்தறிவதும் அவசியம். ஆகவே திருக்குறள் பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றைக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவருள் எழுந்தது. சிறந்த பதிப்பாசிரியர் குழுவின உதவியுடன் இப்பணியை

வித்யாலயத்திலேயே செய்ய நினைத்தார். இந்த நூன் பணிகளை இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் அவர்கள் தொடக்கி வைத்தார்கள். இந்நூல் 1963ஆம் ஆண்டில் சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழா நினைவுப் பதிப்பாக வெளியிடப்பட்டது.

## ஐயாவின் அழைப்பு

***ஐயா விரும்பிய ஒன்றுபட்ட பெருமை மிக்க இந்தியாவை உருவாக்க உதவும் வழி முறைகள்.***

1) நாட்டிற்கும் மக்களுக்கும் நாம் ஆற்ற வேண்டிய கடமையைப் பற்றி எப்பொழுதும் நாம் நினைக்க வேண்டும். 'நாடு நமக்கு என்ன செய்தது என்று கேட்காதீர்கள், நாட்டிற்கு நாம் என்ன செய்கிறோம் என்றே கேளுங்கள்'. என்று திரு கென்னடி கூறியதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.

2) இச்செயலை முதல் இளைஞர்களிடமிருந்து தொடங்க வேண்டும். நாட்டுப்பற்று அற உணர்வு. சமூக உணர்வு ஆன்ம உணர்வு ஆகியவற்றை வளர்க்கும் கல்விமுறை வகுக்கப்பட வேண்டும். அன்பு, சகிப்புத்தன்மை நம் பண்பாட்டைப் பற்றிய பெருமை எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த சிறந்த புலமைப் பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

3) அரசியல்வாதிகள், அமைச்சர்கள், நிர்வாகிகள், தொழில் துறையினர் ஆகியவர்களுக்கான அறநெறி விதிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் இளைஞர்களுக்கு இவர்கள் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும்.

4) சமூக மற்றும் பொருளாதார வேறுபாடுகள் மிகக் குறைவாகவே உள்ள சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5) மகத்தான இந்தியாவை உருவாக்கும் பெரும்பணியில் இளைய தலைமுறையினரை ஈடுபடுத்த வேண்டும் நம் தேசிய வாழ்வின் தரம் உயரவேண்டுமென்றால் நாட்டுப்பற்று நம் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் ஈடுபாடு ஏழைகள் தாழ்த்தப்பட்டோர் ஆகியோரிடம் அன்பு, கருணை ஆர்வலர்களுக்காகத் தியாகம் செய்யும் உணர்வு, பொறாமை உணர்வு, பொறாமை, பகைமை போன்ற தீய உணர்வுகள் இன்மை போன்றவை மக்களிடம் வளர்க்கப்படவேண்டும்.

இந்த ஆழ்ந்த அன்பு, பக்தி, அர்ப்பணிப்பு ஆகியவற்றிருந்து புதிய இந்தியா பிறக்கட்டும்! பெருமையும் நல்வாய்ப்பும் கொண்ட இப்புனிதப் பணியில் நாம் ஒவ்வொருவரும் ஈடுபட்டு இந்தியாவின் ஆன்மீகச் செய்திகள் உலகெங்கும் பரவிப் புதியதோர் உலகம் பிறக்க வழிவகுப்போமாக! இந்தியாவின் மூலைமுடுக்குகளில் வாழும் விவசாயிகள், தொழிலாளர்கள், ஏழைகள், செல்வர்கள் அனைவரும் இம்மகத்தான அருஞ்செயலில் ஈடுபடுவோம். ஆழ்ந்த பக்தியுடனும் இடையறாத முயற்சியுடனும் பெரிய இன்னல்கள் யாவையும் வென்று நம் குறிக்கோளை அடைய உழைப்போமாக. இப்புனிதப் பணியில் ஈடுபட இந்தியத் தாய் நம்மை அழைக்கிறாள்.

வறுமையும் நேர்மையும் உடையவர்கள் ஆண்மையும் பக்தியும் கொண்டவர்கள். இளைஞர்கள் முதியவர்கள், ஆண்கள், பெண்கள் அனைவரும் இந்த அழைப்பை ஏற்க முன்வருவார்களாக! இப்புனிதப் பணியில் ஈடுபட்டு அருளும் புகழும் பெறுவார்களாக!

அன்பு வடிவான ஐயாவைப் பற்றிய இந்தச் சிறு தொகுப்பு சீறி வரும் கங்கையைச் சீசாவினுள் அடைத்து வைக்கும் முயற்சியாய்த் தோன்றினாலும். ஐயாவைப் பற்றி அறிகின்ற ஒவ்வொரு செய்தியும் நம் ஆழ்மனதை ஆக்கிரமிக்க வல்லது. அவருடைய வாழ்வும், வாக்கும் நம் சமுதாயம் மேம்படத் துணையாக நிற்குமென்பதால் இக்கட்டுரையை வாசித்த ஒவ்வொரு அன்பரும் அவர் வழயிலேயே தம்மை இணைத்துக்கொண்டு தம்மால் இயன்ற தொண்டுகளைச் செய்வதே ஐயாவுக்கு நாம் செய்யும் சரியான மரியாதை ஆகும்.

**நன்றி**

**பக்தர்கள் 16வது மாநிலமாநாடு**

**ஈரோடு.**



Sri T.S. Avinashilingam Aiyah



Revered Swami Somanandaji Mahara

# அமுதமொழிகள்

## அருமையோ அருமை!

ஜோடிப் பறவைகளில் ஒன்றை வேடன் வீழ்த்தியதால், மற்றொன்று அடைந்த பெரும் துயரத்தை வால்மீகி முனிவர் தாமும் அனுபவித்தார். அப்போது அவரது துக்கத்தின் வெளிப்பாடாக வந்த சுலோகம் ராமாயணத்தின் துவக்கமாயிற்று.

போரில் அர்ஜுனன் அடைந்த துக்கம் தான் கீதை பிறக்கக் காரணமாயிற்று.

அருணகிரிநாதர் பெரும் துக்கத்திற்கு ஆளாகி உயிரைத் துறக்க முயன்றபோது முருகப் பெருமான் வந்து ஆட்கொண்டார். ஆதலால் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி ஆகிய சிறந்த பக்தி இலக்கியங்கள் நமக்குக் கிடைத்தன.

நாராயண பட்டத்திரி தம் நோய் தீர இறைவனை வேண்ட 'நாராயணீயம்' பிறந்தது.

அது போல மகேந்திரநாத் குப்தர் என்கிற 'ம' குடும்ப வாழ்வில் பட்டதுன்பங்கள் அவரைத் தற்கொலைக்குத் தள்ளின. குருதேவர் அருளால் மீண்ட அவர் மூலமாக 'அமுதமொழிகள்' வெளிப்பட்டன.

ஸ்ரீராமகிருஷ்ணர் சுமார் 160 நாட்கள் பக்தர்களுடன் நிகழ்த்திய உரையாடல்களே 'அமுதமொழிகள்' எனப்படுகின்றன. இவற்றை வங்கமொழியில் தொகுத்தவர் 'ம'.

**எல்லோருக்கும் என்றைக்கும் :**

ஒரு குழந்தையிடம் கரும்புத்துண்டைக் கொடுத்தால் தன்னால் முடிந்தவரை குதப்பிச் சாப்பிடும். ஓர் இளைஞன் அதை நன்றாகக் கடித்து மென்று சாப்பிடுவான். அதையே ஒரு சர்க்கரை ஆலையில் கொடுத்தால் சாறு முழுவதையும் பிழிந்துவிடும். அதுபோல் குழந்தை, இளைஞன், மகரிஷி போன்ற அனைவரும் அமுத மொழிகளை அனுபவிக்கலாம்.

ஆன்மிகத்தின் ஆரம்ப நிலையில் உள்ள பிரவர்த்தகன் முதல் பிரம்மஞானி வரை அனைவருக்கும் அமுதமொழிகளில் செய்திகள் உள்ளன.

ஒரு பக்தர் கேட்ட சந்தேகத்திற்கு ஸ்ரீரமணர், "ஸ்ரீராம கிருஷ்ணருக்குத் தெரியாதது ஆன்மிகத்தில் ஏதேனும் இருக்கிறதா?" என்று கேட்டார்.

உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான அனைத்துச் சக்திகளும் உள்ள உணவை Full Bread 'முழு உணவு' என்பர். அதுபோல மனிதனின் ஆண்மிக நலனுக்குத் தேவையான அனைத்தையும் கொண்டது கீதை அதுபோல் ஆன்மிகச் சாதகனுக்கு வேண்டிய அனைத்தையும் கொண்டது 'அமுதமொழிகள்'.

**விதையில்லா திராட்சைகள் :**

பலாப்பழத்தைச் சாப்பிட வேண்டுமானால், பிசின் ஒட்டாதிருக்க முன்னெச்சரிக்கையாகக் கையில் எண்ணெய் தடவிக்கொண்டு கத்தியால் வெட்டி சுளைகளை எடுத்துச் சாப்பிட வேண்டும். மாதுளம் பழத்தை அவ்வளவு சிரமப்படமால் வெட்டிச் சாப்பிட்டுவிடலாம். விதையில்லா திராட்சைகளையோ கையில் எடுத்தவுடன் அப்படியே சாப்பிட்டுவிடலாம்.

வேதங்கள் இறைவனை அடைவதற்கான வழிகளைக் கூறுகின்றன. ஆனால் அவற்றை நன்கு சிரமப்பட்டுப் படித்த பின்னரே அறிய முடியும். ஆழ்வார்கள்? நாயன்மார்களின் பெருமைகளையும் அதிக சிரமமில்லாமல் மாதுளம் பழங்களைச் சாப்பிடுவதுபோல் அறிந்து கொள்ளலாம்.

ஆனால் அமுதமொழிகள் விதையில்லா திராட்சைகள் போன்றவை. படித்தவுடன் புரிந்து உணரக் கூடிய எளிமை கொண்டவை.

'ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் உள்ள வீடு கோயில் . அந்த நூலைக் கையில் வைத்திருப்பவன், இறைவனின் பாதங்களைப் பற்றிக் கொண்டவன்' என்கிறார் ஞானபீட விருது பெற்ற வேம்பு என்ற கவிஞர்.

அமுதமொழிகள் பழமையான சம்பிரதாயங்கள், ஆன்மிக கருத்துகள் அவற்றிலிருந்து சிறிதும் முரண்படாமல், அவற்றைத் தழுவியே உள்ளன.

அதில் துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம், சைவம், வைணவம், சாக்தம் ஆகிய எல்லாவற்றின் கருத்துகளும் உள்ளன. அமானுஷ்யமான அனுபவங்கள், எளிய கதை வடிவிலான கருத்துகள், ஆன்மிக உரையாடல்கள் என எல்லாம் கிடைக்கின்றன. எனவே இதை ஓர் ஆன்மிக உயர் அங்காடி Spiritual super market எனலாம்.

எல்லாம் மதங்களாலும் அடையக்கூடிய இறைவன் ஒருவனே என்ற மகத்தான உண்மையை அமுதமொழிகள் உணர்த்துகின்றன. அடிப்படை உண்மையான இறைவன், உயிர், உலகம் என்று ஆரம்பித்து எல்லா கருத்துகளும் அமுதமொழிகளில் விளக்கப்பட்டுள்ளன. அதைப் படிப்பவர் அனைவரும் இது தமக்காகச் சொல்லப்பட்டதாகக் கருதுவர்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் நம்மை ஜீவ பிரம ஐக்கியத்திற்குக் கொண்டு செல்லக் கூடியவை.

**தனிச்சிறப்பு** :

சதுப்பு நிலத்தில் நடப்பவனுக்குத் தேவையான ஊன்றுகோல் போல வாழ்க்கைக்கு அமுதமொழிகள் உதவுகின்றன.

'தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி' - இறைவன் ஒருவன் உள்ளான். அவனால்தான் இவ்வுலக இயக்கமே நடைபெறுகிறது என்று கடோபநிஷத் கூறும்.

இதனை ஸ்ரீராமகிருஷ்ணர், இறைவன் ஒன்று என்ற இலக்கம், மற்றவை அதன் பின் போடப்பட்ட பூஜ்யங்கள் என்று எளிய உதாரணத்துடன் விளக்குகிறார். இத்தகைய பல உதாரணங்களை அள்ளி வழங்கியிருக்கிறார் அவர்.

அமுதமொழிகள் என்ற லென்ஸ் மூலம் நுட்பமான உபநிஷதம், வேதாந்தம் எல்லாவற்றையும் உணரலாம்.

**அமுதமொழிகள் பற்றி பெரியோர்கள் :**

1902 ஆம் ஆண்டு ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜெயந்தி அன்று கதாம்ருதம் (அமுதமொழிகளின் மூலம்) வெளியிடப்பட்டது. அதை 'ம' அன்னைக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்தார். அன்னைக்குப் படித்துக் காட்டியபோது அன்னை, குருதேவரே நேரில் வந்து பேசுவது போல் உள்ளது' என்று கூறி 'ம' வை ஆசீர்வதித்தார்.

சுவாமி விவேகானந்தர், அமுதமொழிகளைக் குறிப்பிட்டு, இப்படித்தான் ஸ்ரீராமகிருஷ்ணரின் கருத்துகள் பரவ வேண்டும். இதைப் படிக்கும்போது என் மனம் மகிழ்ச்சியால் பொங்குகிறது. இந்த மகிழ்ச்சியில் எனக்குப் பைத்தியம் பிடிக்காமல் இருப்பது ஆச்சரியம்' என்கிறார்.

அமுதமொழிகளை முதலில் சுவாமி சிவானந்தர் தொகுக்க நினைத்தார். குருதேவரோ, 'இது உன்வேலையல்ல' என்று கூறி அவரைத் தடுத்துவிட்டார். பின்னர் 'ம' அதைத் தொகுத்தார்.

இல்லறத்தார்களுக்கும் இந்த நூல் பயன்படவேண்டும் என்பதால்தான் அதைத் தொகுக்கும் பணி 'ம' விற்கு அளிக்கப்பட்டது போலும்.

ஒருமுறை சுவாமி பிரம்மானந்தர் ரயில் நிலையத்தில் காத்துக் கொண்டிருந்தார். சில மாணவர்கள் அவரிடம் வந்து, "எங்களுக்கு ஏதேனும் அறிவுரை கூறுங்கள்" என்று கேட்டார்கள்.

ரயிலில் ஏறியபடி சுவாமிகள், 'அமுதமொழிகளைத் தினந்தோறும் படியுங்கள்' என்று கூறினார்.

அமுதமொழிகள் சந்திர சூரியர் உள்ளவரை, கடலும் மலையும் உள்ளவரை நிலைத்து நின்று பக்தர்களுக்கு வழி காட்டும்.

**சுவாமி கமலாத்மானந்தர்.**
**தலைவர்**
**ஸ்ரீராமகிருஷ்ணமடம்**
**மதுரை**

**தொகுப்பு : மோகனா சூரியநாராயணன்.**
**நன்றி**
**ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்**

டயரிலி


தவமுனிவர் யோகசுவாமிகள் தாம்வாழ்ந்த காலத்தில் செல்லத்துரை சுவாமிகளுக்கு கூறியவை டயரில் இருந்து எடுக்கப்பட்டவை. ஒன்று அல்லது இரண்டு பேரை துறவிகளாக்கபாடுபடுதல் அவசியம் கத்தோலிக்கமதத்தில் துறவு புரிய குடும்பத்தில் ஒருவர் முன்வருவர். இங்கு யாழ்ப்பாணத்தில் பயன் கருதிதான் இங்குவருவார்கள்.

தனி மனிதனின் நிலை உயர்த்தப்பட்டால், தேசமும் அதன் நிறுவனங்களும் உயர்வடைந்தே தீரும்.

உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

உயர்ந்த லட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறு செய்தால், லட்சியம் ஒன்றும் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதினாயிரம் தவறுகளைச் செய்வான் என்று நான் உறுதியாகச் சொல்வேன்.

சுவாமி விவேகானந்தர்.



அன்பளிப்பு :

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொண்டைமானாறு.

ஸ்ரீலங்கா.

சதாபொன்ஸ் - அல்வாய் 021 2263206